# அரசு ஊழியர்

ஜூன் 2018

மலர் : 39 இதழ் : 5

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடாக ஒரு கோப்பை சூப்

## காக்கையும் குயிலும்

*யாரை எங்கே வைப்பது என்று
யாருக்கும் தெரியலை - அட
அண்டங் காக்கைக்கும்
குயில்களுக்கும் பேதம் புரியலை!
பேரெடுத்து உண்மையச் சொல்லி
பிழைக்க முடியலை - இப்போ
பீடிகளுக்கும் ஊதுபத்திக்கும்
பேதம் தெரியலை...!*

**- கவியரசு கண்ணதாசன்**

## "இடைவிடாத போராட்டங்களும் -அளப்பரிய தியாகங்களுமே வெற்றியின் ரகசியம்"

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதுதான் ஜனநாயகப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்படும் அரசுகளின் கடமையாகும். ஆனால் இன்றைய ஆட்சியாளர்களின் செயல்பாடு அதற்கு மாறாக உள்ளது. தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு, சமூகம் மற்றும் பொருளாதார உரிமைகளுக்காக போராடுகிற அனைவரையும் கண்டுகொள்ளாமல் போராட்டங்களை சமூக விரோத செயலாகவும், போராடுபவர்களை சமூக விரோதிகளாகவும் பார்க்கின்ற சர்வாதிகார ஆட்சியாளர்களாக மாநில மற்றும் மத்திய அரசுகள் மாறிக்கொண்டிருக்கிறன. இது ஜனநாயக நாட்டிற்கு மிகுந்த ஆபத்தானதாகும். அதன் அறிகுறிதான் சமீபத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற "முள்வேலி மற்றும் துப்பாக்கி சூடு சம்பவங்கள்". அரசை எதிர்த்து போராடினால் முள்வேலி அமைத்து அச்சுறுத்துவது. பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து போராடினால் துப்பாக்கி சூடு நடத்துவது. அரசை விட பன்னாட்டு நிறுவனங்களை காப்பாற்றுவதுதான் முதலாளித்துவ அரசுகளின் முக்கிய கடமையாக உள்ளது. மக்களை பாதுகாப்பது அல்ல. ஆக, உரிமைகளுக்காக போராடுவர்களையும் போராட்டங்களையும் தண்டிப்பது என்பதுதான் உலகமயமாக்குதலின் கோரமுகமாகும்.

ஆனால் இன்றைய தமிழக ஆட்சியாளர்கள் அமர்ந்துள்ள சட்டமன்ற அதிகாரம் உட்பட அனைத்து உரிமைகளும் மக்கள் போராடிப் பெற்றவை என்பதை சிந்தித்து பார்க்க மறுக்கிறார்கள்.

ஆனால் நமக்குத் தெரியும் நாம் பெற்றுள்ள ஊதிய மாற்றம் உட்பட அனைத்து உரிமைகளும் இடைவிடாத போராட்டங்களாலும், நமது தலைவர்களின் அளப்பரிய தியாகங்களினாலும், இத்தகைய ஆட்சியாளர்களின் கரங்களிலிருந்து பறிக்கப்பட்டவையாகும்.

சிறை, பணி நீக்கம் மற்றும் காவல் துறையின் மூர்க்கத்தனமான தாக்குதல், நீதிமன்ற தண்டனைகள் போன்ற ஏராளமான அடக்குமுறைகளை சந்தித்து பெற்ற உரிமைகளை பறிக்க நினைக்கும் கொள்கை முடிவுகளை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

மக்களின் இடைவிடாத போராட்டமும், 13 பேரின் உயிர்த் தியாகமும் தான் ஸ்டெர்லைட் ஆலையை மூட முடிந்தது. அடக்குமுறைக்கும் உயிருக்கும் அஞ்சியிருந்தால் அந்நியனின் அடிமை ஆட்சி அகன்றிருக்காது.

அத்தகைய அந்நிய அட்சியின் மிச்ச சொச்சங்கங்கள்தான் இன்றைய ஆட்சியாளர்கள். 100 நாட்கள் உறுதியாக போராடி அளப்பரிய தியாகத்தால்தான் ஆட்சியாளர்களின் கொள்கைக்கு மிகப்பெரிய தோல்வி ஏற்படுத்த முடிந்தது.

இறுதியில் மக்கள் போராட்டம்தான் மகத்தான வெற்றியை பெற்றது.

1990 முதல் உலகம் முழுவதும் அமுல்படுத்தப் பட்ட உலக மயம், தனியார் மயம், தாராள மயம் ஆகிய கொள்கைகளின் விளைவு தான் அரசுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் எதிராக போராட்டம் நடத்தும் பொழுது எந்த உத்தரவும் இல்லாமல் அந்நியனுக்கு ஆதரவாக உள்ளூர் மக்களை துப்பாக்கியால் சுட்டுக்கொள்ளும் கொடுமை நடத்தப்படுவது.

இந்த தாக்குதல் நமக்கும் ஒரு எச்சரிக்கை. உலக மயமாக்குதலின் கோர முகம் நம்மையும் விட்டு வைக்கவில்லை. அங்கே தொட்டு இங்கே தொட்டு கடைசியில் நம் எதிர்கால சந்ததியரின் வாழ்வாதாரங் களை பறிக்கத் தொடங்கியதை அனுமதிக்காமல் அடக்குமுறைகளையும், முள்வேலிகளையும் தாண்டி நாம் நடத்திய இடைவிடாத போராட்டங்களும், தலைவர்களின் அளப்பரிய தியாகங்களும்தான் தற்போது வரை நாம் பெற்ற வெற்றிகளுக்கு காரணமாகும். இடைவிடாத போராட்டங்களைத் தொடர வேண்டியுள்ளது.

பெற்ற உரிமைகளை பாதுக்காக்கவும் நாம் நடத்தும் இடைவிடாத போராட்டங்களில் தொடர்ச்சி தான் ஜாக்டோ-ஜியோ சார்பாக நடைபெறும் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம்.

நமது தலைவர்கள் மட்டும் கலந்து கொள்ளும் உண்ணாவிரதம். 50 வயது முதல் 83 வயது அடைந்த தலைவர்களின் உண்ணாவிரதம். இதிலும் அரசின் அடக்குமுறையும், காவல்துறையின் அராஜகமும் அரங்கேறலாம். புதிய பென்சன் ரத்து, சிறப்பு காலமுறை ஊதியம் ரத்து உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளுக்கு தீர்வு எட்டும் வரை தொடர் போராட்டங்களை முன்னெடுத்து செல்லும் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் எத்தகைய அடக்குமுறையையும் சந்திக்க நாம் தயாராகி விட்டோம்.

தலைவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கும்போது தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அமைதியாக இருக்க முடியாது. தலைவர்கள் உண்ணாவிரதமிருந்தாலும் நாங்களும் தினந்தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து "எங்கள் தலைவர்களை அழைத்துப் பேசு" என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்வோம் என சூளுரைத்து தயாராக வேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தில் 5,75,000 பேரில் (காவல் துறையில் உள்ளவர்களை தவிர) அனைவரும், சத்துணவு,அங்கன்வாடி,ஊராட்சி செயலாளர், கிராம உதவியாளர்கள் என அனைவரும் அணி திரண்டு ஆர்ப்பாட்டத்தில் தினந்தோறும் பங்கேற்று எத்தகைய தியாகத்தையும் செய்து இடைவிடாத போராட்டமும் அளப்பரிய தியாகமும் தான் வெற்றி பெறும் என மீண்டும் மீண்டும் நிரூபிப்போம். ❖



**தோழர் இரா. சீனிவாசன்**
முன்னாள் பொதுச்செயலாளர்



**தோழர் என். இளங்கோ**
முன்னாள் மாநிலப் பொருளாளர்



**தோழர்.இரா.பாலசுப்பிரமணியன்**
முன்னாள் பொதுச்செயலாளர்



**தோழர் பி.கிருஷ்ணசாமி**
முன்னாள் மாநில துணைத் தலைவர்

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில நிர்வாகிகள் கடந்த 31.5.2018 அன்று அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். பணி ஓய்வு காலத்திலும் அவர்களுடைய சமூகப் பணிகள் தொடர, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**



**தோழர் வி. நாகராஜன்**
முன்னாள் மாநில தணிக்கையாளர்

# இது அசாதாரணங்களின் காலம், உறுதியான போராட்டங்களால் மட்டுமே இது வீழும்!

அன்பிற்கினிய தோழர்களே!

காலங்கள் எத்தனை வகைப்படும் என்று வகுப்பறையில் ஆசிரியர் கேட்டபோது நாமெல்லாம் என்ன கூறினோம்? கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்றுவகைப்படும் என கூறினோம். இனிமேல் அது நான்குவகைப்படும் என கூற வேண்டியிருக்கும். ஏனென்றால் நாம் தற்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தை அசாதாரணங் களின் காலம் என்று சொல்வதுதான் சரியானதாக இருக்கும். இந்தியப் பிரதமராக மோடி பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் நாட்டு மக்கள் அனைவரும் குரங்கிடம் மாட்டிக் கொண்ட பூமாலையைப் போல் தங்களை நினைக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்தியா சுதந்திரமடைந்தபோது இந்து முஸ்லிம் பிரச்னை பெரிய சவாலாக இருந்தது. இஸ்லாமியர் களை ஓர் அச்சுறுத்தலாகப் பார்க்கும் சமூகப் போக்கு அப்போதைய பிரதமர் நேருவை ஆழமாக பாதித்திருந்தது. இந்திய ஜனநாயகம் தழைத்திருக்க வேண்டுமானால் சிறுபான்மையினரின் நலன்கள் காக்கப்பட வேண்டும், எந்த வகையிலும் அவர்களை மதம் சார்ந்து பாகுபடுத்தக்கூடாது என்பதில் உறுதி யாக இருந்தார். மதச்சார்பின்மையை அவர் தன்னுடைய அடிப்படை அரசியல் கோட்பாடுகளுள் ஒன்றாக முன்னிறுத்தினார். நேருவின் இந்தியாவை நரேந்திரமோடி தலைகீழாகத் திருப்பிப் போட்டிருக் கிறார். நேரு மிகவும் சிரமப்பட்டு கட்டுக்கோப்பாக வைத்திருந்த அனைத்தும் இன்று வீறுகொண்டு எழுச்சி பெற்றிருக்கின்றன. அவர் ஆழமாக வலியுறுத் திய அனைத்தும் இப்போது பலமிழந்து வருகின்றன. மதச்சார்பின்மை, அறிவியல் கண்ணோட்டம், ஜனநாயகப் பற்று, பகுத்தறிவு நாட்டம், சமத்துவ வேட்கை, அறிவுத் தேடல், அனைத்தும் வேகவேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. பிரிவினையும், வகுப்புவாதமும், எதிர்காலம் குறித்த நிச்சயமின்மையும் பரவிக்கிடந்த கொந்தளிப்பான ஒரு காலகட்டத்தில் நேரு பெரும்பான்மை இந்து மதத்தின் பக்கம் சாயாமல் நடுநிலை வகித்து சமூக ஒழுங்கை நிலைநாட்டினார். நேரு வெறுத்து ஒதுக்கிய வகுப்புவாதம் இன்று புதிய பலத்துடன் செழிப்படைந்திருக்கிறது. தேசத்தின் சமூக ஒழுங்கு சீர்குலைந்து மீண்டும் ஒரு கொந்தளிப் பான காலகட்டத்துக்கு இந்தியா திரும்பிக் கொண் டிருக்கிறது. அதற்கான விலையை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் நாம் அசாதாரணங்களின் காலத்தில் தள்ளப்பட் டிருக்கிறோம்.



### வளர்க்கப்படும் வெறுப்பு அரசியல்

காந்தியை கொன்ற கோட்சே கன்னியவானாக காட்சிப்படுத்தப்பட்டு நியாயப் படுத்தப்படும் போக்கும், காவரியில் நீர் திறக்க பலமுறை உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும் ஒருமுறை கூட அதைத் திறக்காத கர்நாடக அரசும், மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டும் அதை செயல்படுத்தாமல் நின்ற மத்திய அரசின் போக்கும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் மீது முன்னுதாரணமே இல்லாத வகையில் தகுதி நீக்க தீர்மானம் கொண்டுவந்த செயலும், அதை முன்னுதா ரணமே இல்லாத வகையில் மாநிலங்களவைத் தலைவர் வெங்கைய்யா நாயுடு நிராகரித்த செய்கையும், சமூகப்பாடல் பாடிய கோவனை நக்சலைட்டைப்போல் நள்ளிரவில் வீடுபுகுந்து கைது செய்யும் நடவடிக்கையும், பெண் பத்திரிகையாளர் களைப் பற்றி கேவலமாக பதிவிட்ட சிரிப்பு நடிகர் எஸ்.வி.சேகர் பாஜக ஆதரவாளர் என்ற காரணத்திற்காக இன்னும் கைது செய்யப்படாமல் உலா வரும் காட்சிகளும், நடிகையின் பிறந்தநாளுக்கு ட்வீட் போடும் மோடி இத்தனை பேர் இறந்ததற்கு ஒரு இரங்கல் செய்திகூட போடாத அதிர்ச்சியும், துப்பாக்கி சுடத்தெரியாமல் திருடனை பிடிக்க ராஜஸ்தான் வரை போய் சூடுபட்டு வந்த தமிழக போலீஸ், தூத்துக்குடியில் மட்டும், போராட்டம் நடத்திய பொதுமக்களை நெஞ்சில் குறி பார்த்து சுட முடிந்த அதிசயமும், சொந்த மக்கள் இறந்து இத்தனை நாள் ஆனபிறகும் தூத்துக்குடிக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழகத்தின் முதல்வர் ஆறுதல் கூறாத லாவகமும்... நாம் இப்போது அசாதாரண காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கான மிகச்சில உதாரணங்களே.

இந்த அசாதாரணங் களின் காலம் சிறு பான்மையினருக்கும் பெண்களுக்கும் எதிரான சிந்தனைப் போக்கையும் குற்றச் செயல்களையும் அதிகரித்துள்ளன. யாரோ முகம் தெரியாத நபர் அல்ல, முக்கியப் பொறுப்புகளில் இருப்பவர்களே, அஞ்சத்



தக்க வகையில் பேசுகின்றனர், அருவெறுப்பூட்டும் செய்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் கையிலெடுக்கும் ஆபத்தான அரசியலை நியாயப்படுத்த, உயர்த்திப் பிடிக்க ஒரு பெருங்கூட்டம் தோன்றியிருக்கிறது. வன்முறை, சாதியம், மதவாதம், வகுப்புவாதம், ஆணாதிக்கம், அனைத்தையும் ஒரு கூட்டம் அரசாங்கத்தின் ஆசிர்வாதத்தோடு நிகழ்த்தும் வேலைகள் துரிதப்பட்டிருக்கின்றன. மாட்டிறைச்சி விற்பவனை கொலை செய்வதும், மாற்று இனத்தவரை மணம்புரியும் தலித்துகளை ஆணவக் கொலை புரிவதும், அரசியலில், பொதுவாழ்வில் ஈடுபடும் பெண்களை கொச்சைப்படுத்தும் வகையில் பொறுப்புள்ள அரசியல் கட்சித் தலைவர்களே பேசுவதும் தாராளமாக தலைகாட்ட ஆரம்பித்திருக்கின்றன.

## மத அடிப்படைவாதமாகிவிட்ட மத நம்பிக்கை

நவீன அறிவியல் கண்ணோட்டமும் முற்போக்கு சிந்தனைகளும் வெறுத்து ஒதுக்கப்படுவதன் விளைவு இது. சகிப்புத் தன்மை ஒரு வசைச் சொல்லாக மாறிவிட்டதால், வெறுப்புக் குற்றங்கள் பட்டவர்த்தனமாகவே பெருக ஆரம்பித்துவிட்டன. கேள்வி கேட்கும் ஊடகம் வெறுக்கப்படுகிறது. பத்திரிகையாளர்கள் பரிகசிக்கப்படுகிறார்கள் மோசமாக அவமதிக்கப்படுகிறார்கள். நியாயங்களை கேள்வி எழுப்புகிறவர்கள் மாவோயிஸ்ட்டுகள் என்றோ அல்லது மார்க்சிஸ்டுகள் என்றோ முத்திரை குத்தப்பட்டு புறக்கணிக்கப்படுகிறார்கள். சிறுபான்மையினரையும் மாற்றுக் கருத்து உள்ளவர்களையும் மிக மோசமாக வசைபாட ஒரு குழு உருவாகியிருக்கிறது. அதிகாரத்திற்கு எதிராக கருத்து கூறுபவர்களை, கேள்வி எழுப்புகிறவர்களை இந்த அடியாட்கள் துரத்தி துரத்தி அச்சுறுத்துகிறார்கள். சம்பந்தப்பட்டவர் பெண்ணாக இருக்கும் நிலையில், பாலியல் ரீதியான அருவெறுப்பூட்டும் வசவுகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மத நம்பிக்கை, மத அடிப்படைவாதமாக உருமாற்றப்பட்டிருப்பதன் விளைவு இது.

கத்துவா சம்பவத்தில் குற்றம் இழைத்தவர்களுக்கு ஆதரவாக பாஜகவைச் சேர்ந்த இரு அமைச்சர்கள் பேரணி நடத்தும் அளவுக்கு இந்த உருமாற்றம் விகாரமடைந்திருக்கிறது. கொல்லப்பட்டது ஒரு இஸ்லாமியக் குழந்தை என்பதும் குற்றவாளிகள் இந்துக்கள் என்பதும் குற்றத்தை நியாயப்படுத்த போதுமான காரணங்களாக அமைந்துவிட்டன. ஆனால், 'உனா'வில் குற்றம் இழைத்தவர் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் வழக்கைப் பதிவு செய்வதே பெரும் சவாலாக மாறியிருக்கிறது. 'காவல்துறை இப்படித்தான் நடந்து கொள்ளும் என்றால் பாதிக்கப்பட்டவர்கள் எங்குதான் சென்று முறையிடுவது. சட்டம் ஒழுங்கு முழுவதும் குலைந்துவிட்டது என்றுதான் கூறமுடியும் என்று உனாவ் சம்பவம் குறித்து அலகாபாத் உயர்நீதிமன்றம் முறையிட வேண்டிய அவலம் ஏற்பட்டது. தமிழகத்திலும் எச்.ராஜாவின் பாஸ்பரஸ் பேச்சுக்கள் அநாகரீகத்தின் உச்சங்கள் என்று தெரிந்த பிறகும் அவர்மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்த அரசுக்கும் காவல்துறைக்கும் உயர்நீதிமன்றம் வழக்கை பதிவு செய்து விசாரிக்கச்சொல்லி கட்டளை இட்டிருப்பதிலிருந்து நடந்து கொண்டிருப்பது பொதுமக்கள் நலன்பேணும் நல்லாட்சியில்லை என்பது மட்டும் தெளிவு. இந்தியா சுதந்திரம் அடைந்த போது அது ஒரு நிலவுடைமைச் சமூகமாக இருந்தது. நேரு காந்தி போன்றவர்கள் அதை 21ஆம் நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்ல விரும்பி பெரும் கனவுகள் கண்டனர். ஆனால் தற்போதைய பிரதம மந்திரி மோடியோ இப்போதுள்ள இந்தியாவை மீண்டும் நிலவுடமை காலத்துக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறார்.

## மோடிக்கு கூலி கொடுக்க தயாராகிறது இந்தியா

நான்காண்டு கால ஆட்சியில் ஏழை மக்களும் விவசாயிகளும் மோடியின் ஆட்சியில் அடைந்த சொல்லொணா இன்னல்களுக்கு இப்போது மோடியின் அரசுக்கு எதிராக திரும்பியிருக்கின்றன. இந்தியாவில் இருபது மாநிலங்களில் தனது அதிகாரத்தை பரப்பியுள்ள மோடியின் அரசு அதை எப்படியெல்லாம் அதிகார துஷ்பிரயோகம் செய்து பரப்பியது என்பதற்கு கடைசி சாட்சியாக கர்நாடகத் தேர்தல் முடிகளுக்குப் பின் நடந்த கபட நாடகங்களைப் பார்த்து நாடே சிரித்தது. இந்தமுறை காங்கிரஸ் விழித்துக் கொண்டதால் பாஜகவின் அரியணைக்கனவு கலைந்து போனது. பாஜகவின் வீழ்ச்சியின் தொடர்ச்சி சமீபத்தில் நடந்திருக்கும் 22 இடைத்தேர்தல் முடிவுகளின்படி தொடர்கதையாகி இருக்கிறது. 22 தொகுதிகளில் 20 தொகுதிகளில் மாற்றுக் கட்சியினரே கோலேச்சியுள்ளனர். 2 தொகுதிகளில் மட்டுமே பாஜக வெற்றியை தக்க வைத்துக் கொள்ள முடிந்துள்ளது. இந்த முடிவுகள் மக்களைத் தேர்தல் முடிவுகளுக்கான முன்னோட்டமாகவே அமைந்துள்ளது. பண மதிப்பிழப்பு நடவடிக்கை, ஆதார்கார்டு இணைப்பு அவஸ்தை, காஸ் மானியங்கள் பெயரில் சிலிண்டர் விலையேற்றம், பெட்ரோல் டீசல் விலை உயர்வுகள், விலைவாசி ஏற்றம் போன்ற நடுத்தர, ஏழை மற்றும் விவசாய மக்களை நேரடியாக பாதித்துள்ள பல அம்சங்களுக்கு இப்போது பாஜகவுக்கு பதில்தர காத்திருக்கிறது இந்தியா. இது வரும் மக்களவைத் தேர்தலில் கண்டிப்பாக எதிரொலிக்கும்.

## தலையாட்டி பொம்மைகளின் தனிப்பெரும் ராஜ்ஜியம்

தமிழகத்தைப் பொறுத்தவரை தலையாட்டி பொம்மைகளின் ஆட்சிதான் நடக்கிறது என்பது ஒவ்வொரு சம்பவத்திலும் உறுதிபடுத்தப்பட்டு வருகிறது. காவிரி விவகாரம் தொடங்கி, ஸ்டெர்லைட் விவகாரம் வரை ஆளும் அதிமுக அரசு மத்திய அரசின் ஊதுகுழலாக செயல்பட்டு வருகிறது. மோடி போடும் டியூனுக்கு ஆடும் நாடக நடிகர்களாக எடப்பாடியும் பன்னீர் செல்வமும் சதா சர்வ சாஷ்டாங்க நமஸ் காரத்தை டெல்லி இருக்கும் திசை நோக்கி போட்டுக்கொண்டிருப்பதை தமிழகம் வேடிக்கை யுடனும் வேதனையுடனும் பார்த்துக் கொண்டிருக் கிறது. தொடர் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் மூலமாக காவிரி பிரச்சனையில் தமிழகத்தின் முதலமைச்சரை செயல்பட வைத்துள்ளனர் மக்களும் விவசாயிகளும். அப்போதும் அவர் அடக்கித்தான் வாசிக்கிறார். ஸ்டெர்லைட் ஆலை மூடல் விவகாரம் இத்தனை விஸ்வரூபம் எடுக்கும் என்று மோடியும் நினைத்திருக்க மாட்டார். எடப்பாடியும் நினைத் திருக்க மாட்டார். அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாத தால்தான் மோடியும், எடப்பாடியும் தூத்துக்குடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலோ கொலை செய்யப்பட்ட மக்களின் குடும்பங்களுக்கு நேரடி அனுதாபங்களோ தெரிவிக்கவோ தகுந்த பதிலுரைக் கவோ செல்லவில்லை. மாறாக இன்னமும் முதல்வர் காவல்துறையின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருவது தூத்துக்குடி மக்களை சொல்லமுடியா கோபத்துக்கு ஆளாக்கியுள்ளது.

## சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா அவர்தான் சொல்லணும்

எல்லாம் முடிந்த பின் ஒன்பதாம் நாள் காரியத்துக்கு போன சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்திற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த இளைஞரின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திரும்பி வந்த ரஜினி ஒரே நேரத்தில் இரண்டு மாங்காய்களை அடிக்கப்பார்த்து வீழ்ந்திருக்கிறார். ரஜினி சந்தித்த அந்த இளைஞர் போராட்டத்தின் போது போலீஸ் காரர்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிசிக்சை பெற்று வருகிறார். அவர் ரஜினியிடம் கேட்ட கேள்வி ''நீங்க யாரு?'' அதிர்ச்சியில் உறைந்து போன ரஜினி அதற்கு சொன்ன பதில் ''நான் ரஜினிகாந்த்.'' மீண்டும் அந்த இளைஞர் ''நீங்க எங்க இருந்து வர்றீங்க...?'' ரஜினி, ''சென்னையில் இருந்து.'' இளைஞர், ''அப்படியா... 99 நாளா எங்கே போயிருந் தீங்க?'' இந்தக் கேள்வி ரஜினியின் கன்னத்தில் அந்த இளைஞர் அடித்த அடியாகும். அந்தக் கேள்விக்கு ரஜினியிடம் பதில் இல்லை. வணிக அரசியல் செய்பவர்களும், கார்ப்பரேட்டுகளின் கைக்கூலிகளும் தங்களுக்குள்ள செல்வாக்குகளை இனிமேல் தவறாக பயன்படுத்தினால் என்ன ஆகும் என்பதற்கான உதாரணம்தான் அந்த இளைஞரின் பதில். தூத்துக்குடி சம்பவத்திற்குப் பின் பேட்டியளித்த ரஜினிகாந்த் எதற்கெடுத்தாலும் தமிழகத்தில் போராட்டத்தை கையிலெடுக்கிறார்கள், போராட்டங் களை சில சமூக விரோதிகள் தூண்டி விடுகிறார்கள். அதற்கு மக்கள் இரையாகிவிடக்கூடாது என்கிறார். மக்கள் எல்லாம் ஏதோ ஆர்வத்துடன் வந்து போராடு வது போலவும் அதற்கு சமூகவிரோதிகள் உதவுவதான போக்கிலும் பேசியுள்ள ரஜினியின் பேச்சு சிறுபிள்ளைத்தனமான பேச்சே. ஏன் எதற்கெடுத் தாலும் மக்கள் போராட வருகிறார்கள் என்பதை ரஜினிகாந்த் சிந்திக்க வேண்டும். ஜல்லிக்கட்டு போராட்டத்தால்தான் தமிழகத்தின் தன்மான உரிமை மீட்கப்பட்டது என்பதும் ஒன்றுபட்ட போராட்டத்தின் காரணமாகத்தான் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான வாசல் திறக்கப்பட்டது என்பதையும் 100 நாள் மக்கள் போராட்டம்தான் ஸ்டெர்லைட் ஆலையை மூட வைத்துள்ளது என்பதையும் ரஜினி புரிந்துகொண்டால் அவர் போராட்டங்களை கொச்சைப்படுத்த வேண்டிய அவசியம் எழாது.

## பொய்ப் பிரச்சாரங்களின் மூலம் மலினப்படுத்தப்படும் போராட்டங்கள்

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டங்களும் இப்படித்தான் பொய்பிரச்சாரங்களின் மூலம் மலினப் படுத்தப்படுகின்றன. ஊதிய உயர்வு அல்லது ஊதிய மாற்றம் கேட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்தும் போராட்டங்களெல்லாம் நாமும் நம்முடைய குடும்பங்களும் மட்டுமே பயன்பெறுவதற்காக நடத்தப்படும் போராட்டங்கள் அல்ல. அவை சமூக ஸ்திரத்தன்மை, சமூக ஏற்றம் மற்றும் உலகளாவிய ஊதியமுறைகளுக்கு ஈடான வாழ்க்கைத்தரத்தை நிலை நிறுத்துவதற்கான நங்கூரங்களாகும். உலக அளவில் அரசு உழியர்களின் ஊதியநிலையை கருத்தில் கொண்டே தனியார் நிறுவன ஊழியர்களின் ஊதியங்களும், தற்காலிக, தினக்கூலி உள்ளிட்ட அடிப்படை தொழிலாளர்களின் ஊதியங்களும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அரசு ஊழியர்கள் தங்கள் ஊதியம் மூலம் ஏற்படுத்தும் வாங்கும் சக்தியின் அடிப்படையிலேயே அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முதல் அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் உள்ளிட்டவைகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. மக்களின் வாங்கும் சக்திதான் நாட்டின் பொருளாதார முன்னேற் றத்திற்கும், சிறு மற்றும் பெரு தொழில்வளர்ச்சிக்கான ஆதாரங்களாக உள்ளன. ஆனால் கடந்த பதினைந்து இருபது ஆண்டுகளாக இவை தலைகீழாக

மாறிவிட்டன. ஒருபுறம் தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியம் மறுக்கப்பட்டு வருவதும், இன்னொரு பக்கம் உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாடின்றி தாறுமாறாக உயர்ந்து வருவதும் நாட்டை அழிவுப்பாதையை நோக்கித் திருப்பியுள்ளன. இவை பணவீக்கம், கருப்புப் பண நடமாட்டம், கள்ளச்சந்தை, லஞ்ச லாவண்யம், ஊழல், கையூட்டு போன்றவற்றிற்கு சிவப்புக் கம்பளம் விரித்துள்ளன. அரசு ஊழியர்களுக்கு தங்கள் வாழ்க்கையை நடத்திச்செல்லத் தேவையான கௌரவமான ஊதியம் மறுக்கப்படுவதன் மூலம் கையூட்டு, லஞ்சம் பெறுதல் போன்ற இழிசெயல்களுக்கு அவர்கள் உந்தப்படும் நிலை ஏற்படும் என்பதையும், அதன் மூலம் சாமான்ய மக்கள் அரசின் உதவிகள் பெறுவது முதல், உரிமைகள் பெறுவது வரை மிகுந்த இடர்ப்பாடுகள் எழுந்து சமூகச் சீர்கேடுகள் உருவாகும் என்பதையும் அரசுக்கு பலமுறை உணர்த்தியும், அது பாராமுகமாக இருப்பதினாலேயே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் சமரசமற்ற போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என்பதை ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் உணரவேண்டும்.

விவசாயிகள் சாகுபடி செய்யும் தானியங்களுக்கு உகந்த விலை கிடைப்பதில்லை. அதை அவர்களே நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று நாம் போராடுகிறோம். காவிரி நீரை நம்பி விவசாயம் இருக்கிறது. ஆனால் காவிரி நீர், நீதிமன்ற உத்தரவுகளுக்குப் பிறகும் மறுக்கப்படுகிறது. அதற்காகவும் நாம் குரல் கொடுக்கிறோம். விலைவாசி உயர்வுக்காக, போக்குவரத்து தொழிலாளர்கள் ஓய்வூதியம் மற்றும் ஊதிய உயர்வுக்காக, மருத்துவ மேற்படிப்பில் கிராமப்புறங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவ மாணவர்களுககு 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்காக, நீட் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்களிப்பதற்காக, என பல்வேறு விதமான சமூக முன்னேற்றத்திற்கான போராட்டங்களில் அரசு ஊழியர் சங்கம் பங்கேற்று களத்தில் நிற்பதற்கான காரணம் அரசு ஊழியர்கள் பிரச்னைகள் நாட்டின் பிரச்னைகளோடு பின்னிப் பிணைந்து கிடக்கிறது என்பதால்தான்.

## தொடர் போராட்டங்கள் கற்றுத்தந்த பாடங்கள்

ஜல்லிக்கட்டு போராட்டம் நடந்தபோது அரசாங்கம் உடனடியாக அதில் தலையிடவில்லை, ஹைட்ரோகார்பன் திட்டத்திலும் அது உடனடியாக போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளவில்லை, டெல்லியில் நடந்த விவசாயிகள் போராட்டம் கூட 40 நாட்கள் தாண்டிய பிறகே உறுதிமொழியின் அடிப்படையில் நிறுத்தப்பட்டது. ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்தில் 100 நாட்கள் வரையிலும் அரசுத்தரப்பில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையோ அணுகுமுறையோ கையாளப்படவில்லை. என்ன வேண்டுமானாலும் போராடிக் கொள்ளுங்கள் ஆலையை மூடமாட்டோம் என்பதே அரசின் முடிவாக இருந்தது. 13 உயிர்கள் பலியிடப்பட்ட பின் இந்த போராட்டத்தின் வலிமையை உலகம் கண்டது. அரசாங்கம் மக்களின் போராட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது. இதுபோன்ற போராட்ட வெற்றிகள் எதற்கும் அசையாமல் துணிந்து நிற்பதால் மட்டுமே கிடைக்கக்கூடியவையாகும்.

---

### மாவட்டப் பேரவை

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 13வது தஞ்சை மாவட்டப் பேரவை 19.5.2018 அன்று கும்பகோணத்தில் சை.கோவிந்தராசு தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன் பேரவையினை துவக்கி வைத்தார். ஆ.ரெங்கசாமி வேலை அறிக்கையினையும், எஸ்.கோதண்டபாணி நிதிநிலை அறிக்கையும் சமர்ப்பித்தனர். மாவட்ட நிர்வாகிகள் சிவ.இரவிச்சந்திரன், எஸ்.தமிழ்வாணன், அ.விஸ்வேஸ்வரன், ப.கோதண்பாணி, தி.ரவிச்சந்திரன், ஏ.ஆர்.கவிதா, எஸ்.நீலாஜெயந்தி, டி.கோகிலாதேவி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். துறைவாரி சங்க நிர்வாகிகள் ஆர்.ராஜகோபாலன், வி.பார்த்தசாரதி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட இணைச் செயலாளராக ஏ.செந்தில்குமார் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.செல்வி நன்றி கூறினார். இதில் 102 பேர் கலந்து கொண்டனர்.*

### வட்டப் பேரவை

*திண்டுக்கல் அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட ஆட்சியரக கிளையின் ஆண்டுப் பேரவை 21.5.2018 அன்று அ.கா.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. விஜயகுமார் வரவேற்றார். எஸ்.அக்பர் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். துறைவாரி சங்க நிர்வாகிகள் ஆர்.கே.ராமச்சந்திரன், விஜயகுமார், எம்.அண்ணாதுரை, கே.ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தலைவராக எஸ்.விஜயகுமார், துணைத் தலைவர்களாக எஸ்.அக்பர், க.செல்வராஜ், செயலாளராக ராஜாமணி, இணைச்செயலாளர்களாக கே.பாண்டி, காளிராஜ், பொருளாளராக எம்.அண்ணாதுரை, மாவட்ட செயற்குழு உறுப்பினராக எம்.விஜயகுமார் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து மாவட்ட செயலாளர் எஸ்.முபாரக் அலி நிறைவுரையாற்றினார். பிரவின் நன்றி கூறினார்.* ❖

# அரசின் அலட்சியப் போக்கிற்கு ஒரே பதிலடி
# காலவரையற்ற உண்ணாநிலை அறப் போராட்டமே!

அன்பிற்கினிய தோழர்களே!

**வேதனைகளும், வேதனைகளை விஞ்சும் வேடிக்கைகளும்!**

08.05.2018 அன்று ஜாக்டோ-ஜியோவால் நடத்தப்பட்ட கோட்டை முற்றுகைப் போராட்டம் பல அனுபவங்களை நமக்கு உணர்த்தி இருக்கிறது. அவற்றில் பிரதானமானது இந்த ஆட்சியாளர்கள் நாட்டு நலனைப் பற்றியோ, மக்கள் நலனைப் பற்றியோ, அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் நலனைப்பற்றியோ கடுகளவும் கவலையோ, அக்கறையோ கொள்ளவில்லை என்பதுதான். மாறாக துப்பாக்கிச்சூடு வேறுவழியின்றி தவிர்க்க இயலாத ஒன்று என்று பேட்டி அளிக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களை ஏன் போய் பார்க்கவில்லை என்ற கேள்விக்கு 144 தடைச்சட்டம் இருக்கும்போது எப்படி போய் பார்ப்பது. சட்டத்தை நாமே மீறலாமா என்கிறார் முதல்வர். இத்தனை வேதனைகளையும் மீறி இந்த ஆட்சியாளர்களால் எப்படி வேடிக்கை செய்ய முடிகிறது என்ற வியப்புதான் மிஞ்சுகிறது.

**அல்லவை செய்தொழுகும் வேந்தன்!**

ஒரு நல்ல அரசு தன் மக்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு திருவள்ளுவர் முதல் தில்லி உச்சநீதிமன்றம் வரை பாடம் சொல்லிக்கொடுத்த பிறகும் அவற்றையெல்லாம் தூக்கி வீசிவிட்டு தங்கள் சுயநலங்களுக்காக எதையும் இழக்கத் தயாராகி நிற்கும் முதன் மந்திரி முதல், கடைசி மந்திரி வரை, நிர்வாகத்தை இதயமற்ற இயந்திரங்களான அதிகார வர்க்கத்திடம் கொடுத்துவிட்டு, நிதிகளை பங்கு போட்டுக்கொள்ளக்கூட நேரமில்லாத கஜானாதாசர்களாகி விட்டதை நாடே அருவெறுப்புடன் பார்க்கிறது. தூத்துக்குடி துயரத்திற்காக நாடே கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் நிலையில், நாடாள்பவர்கள் பூப்புனித விழாவையும், அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தையும் அவசியமானதாக்கியிருக்கிறார்கள்.

**''கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு**
**அல்லவை செய்தொழுகும் வேந்து''.**

என்ற திருவள்ளுவரின் குறள், அதாவது குடிமக்களை வருத்தும் செயல்களையே மேற்கொண்டு தீமை செய்து ஆட்சி நடத்துகிற வேந்தன், கொலையே தொழிலாக கொண்ட பாதகர்களைவிட கொடியவன் என்கிற கூற்று, இன்று தமிழக மக்கள் நேரடியாக அனுபவிக்கிற அவலமாக மாறியிருக்கிறது.

**புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப்பெறாமல் நடத்தப்படும் தில்லுமுல்லுகள்!**

போராடும் பொதுமக்களை தீவிரவாதிகளாய் நினைத்து தீர்த்துக்கட்டுவதும், முற்றுகைப்போராட்டம் நடத்தும் ஊழியர்களை முள்வேலி அமைத்து நையப்புடைப்பதும் இந்த அரசின் கையாலாகத்தனத்துக்கு சிறந்த உதாரணங்கள். 99 நாட்கள் அமைதியாக போராடியும் அரசாங்கம் கேட்கவில்லை என்பதால்தான் பொதுமக்கள் முற்றுகை போராட்டம் நடத்த முடிவெடுத்தார்கள். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் விஷயத்திலும் இதுதானே நடந்து கொண்டிருக்கிறது. 19.02.2016ஆம் தேதி மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் அறிக்கை வாசித்தார்:

“ஒளிவு மறைவற்ற, திறமை மிக்க, பொறுப்புள்ள நிர்வாகத்தை அளிப்பது நல் அரசின் இலக்கணம் ஆகும். இந்த அடிப்படையிலேயே எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. அரசின் முகமாகவும் மனமாகவும் செயல்படுகிறவர்கள் அரசு அலுவலர்கள்தான். அரசால் தீட்டப்படும் செயல் திட்டங்களும், வகுக்கப்படும் நலத் திட்டங்களும் உரிய முறையில் மக்களைச் சென்றடையச் செய்பவர்கள்அரசு அலுவலர்கள். ஒரு அரசின் செயல்திறன் அரசு அலுவலர்களின் செயல்திறனைப் பொறுத்தே அமையும். அரசின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு அலுவலர்கள். இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசு அலுவலர்களின் நலனில் எப்போதும் தனி அக்கறை கொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது”.

இந்த அறிக்கையில் 10ஆம் எண்ணிட்ட பத்தியில்

> **''பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து. பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே செயல்படுத்திட வேண்டுமென்று பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள் கோரி வருகின்றன. இந்த கோரிக்கை குறித்து தீவிரமாக ஆராயப்பட வேண்டும். எனவே, இதுபற்றி ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரைக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும். அந்த வல்லுநர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும்.''**

என அறிவிக்கிறார். இந்த அறிவிப்பைக்கூட முதல்வர் ஜெயலலிதா தன்னிச்சையாக வெளியிடவில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 2016 பிப்ரவரி மாதத்தில் நடத்திக் கொண்டிருந்த காலவரையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தின் அழுத்தத்தினால் வெளியிடப்பட்ட அறிவிப்பாகும் அது.

பிப்ரவரி 19, 2016ஆம் தேதி, அப்போதைய முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிக்கையின் பேரில் 26.2.2016ஆம் தேதி அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி திருமதி சாந்தா ஷீலா நாயரை வல்லுநர் குழுத் தலைவராக நியமித்து அந்தக்குழு புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெற்று, பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர்வது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க நான்கு மாதங்கள் காலவரையறை நிர்ணயிக்கப்பட்டது. அதன் பிறகு பல நாலு மாதங்கள் வந்துவிட்டது. வல்லுநர் குழுவின் பெயரில் இந்த அரசாங்கம் எத்தனை முறை அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் ஏமாற்றி இருக்கிறது என்பதற்கு கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் அரசாணைகளே ஆதாரங்களாகும்.

| வ எண். | அரசாணை எண். | நாள் | வல்லுநர் குழுத் தலைவர் | காலவரை/ நீட்டிப்பு | காலவரை முடிந்த தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | எண்.65 நிதி (ஊதிய நிர்ணயம்) பிரிவு | 26.02.2016 | திருமதி. சாந்தாஷீலா நாயர் | 4 மாதங்கள் | 25.06.2016 |
| 2 | எண்.220 நிதி (ஊதிய நிர்ணயம்) பிரிவு | 28.07.2016 | திருமதி. சாந்தாஷீலா நாயர் | 3 மாதங்கள் நீட்டிப்பு | 26.09.2016 |
| 3 | எண்.289 நிதி (ஊதிய நிர்ணயம்-1) பிரிவு | 14.11.2016 | திருமதி. சாந்தாஷீலா நாயர் | 26.09.2016 முதல் 3 மாதங்கள் நீட்டிப்பு | 25.12.2016 |
| 4 | எண்.52 நிதி (ஊதிய நிர்ணயம்-1) பிரிவு | 02.03.2017 | திருமதி. சாந்தாஷீலா நாயர் | 26.12.2016 முதல் 3 மாதங்கள் நீட்டிப்பு | 25.03.2017 |
| திருமதி. சாந்தாஷீலா நாயர் 30.03.2017 அன்று தன் வல்லுநர் குழுத் தலைவர் பதவியை ராஜினாமா செய்ததால் வல்லுநர் குழு செயல்படாமல் முடங்கியது. வேறு யாரையும் நியமிக்காத நிலையில் பலகட்ட போராட்டங்களுக்குப் பின்னனர் ஜாக்டோ ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்தம் அறிவித்த பின்னணியில் 3.8.2017ம் தேதி புதிய வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. அதன் தலைவராக டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார். | | | | | |
| 5 | எண்.235 நிதி (ஊதிய நிர்ணயம்-1) பிரிவு | 03.08.2017 | டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் | நவம்பர் 2017 வரை | 30.11.2017 |
| 6 | எண்.367 நிதி (ஊதிய நிர்ணயம்-1) பிரிவு | 14.12.2017 | டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் | ஒரு மாதம் டிசம்பர் 2017 வரை நீட்டிப்பு | 31.12.2017 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | எண்.5 நிதி (ஊதிய நிர்ணயம்-1) பிரிவு | 04.01.2018 | டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் | ஒரு மாதம் ஜனவரி 2018 வரை நீட்டிப்பு | 31.01.2018 |
| 8 | எண்.51 நிதி (ஊதிய நிர்ணயம்-1) பிரிவு | 15.02.2018 | டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் | இரண்டு மாதங்கள் மார்ச் 2018 வரை நீட்டிப்பு | 31.03.2018 |

கடைசியாக வெளியிடப்பட்ட அரசாணை 31.03.2018ஆம் தேதியோடு முடிந்த நிலையில் வல்லுநர் குழு அறிக்கை தாக்கல் செய்யாத நிலையில் இந்த அரசாங்கம் அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் மீண்டும் மீண்டும் கங்கணம் கட்டி ஏமாற்றுவதை எண்ணி கொதித்துப் போயிருக்கிறார்கள் ஒவ்வொரு ஊழியரும். 31.3.2018க்குப் பிறகு வல்லுநர் குழுவின் காலவரை நீட்டிக்கப்பட்டதற்கான அறிவிப்போ அரசாணையோ இன்றுவரை வெளியிடப்படவில்லை. சங்கத்துக்காரர்கள் போராட்டம் நடத்தினால்தான் வல்லுநர்குழுவின் காலவரை நீட்டிப்பு வரும் என்ற நிலைதான் உள்ளது. ஊதிய மாற்றத்தை 2016 ஜனவரி மாதம் முதல், தானே முன்வந்து ஏற்படுத்த வேண்டிய தமிழக அரசு, அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் 21 மாதங்கள் போராடி காலவரையற்ற வேலைநிறுத்தம் என்ற கடுமையான முடிவை எடுத்தபோதும் மசியாத அரசு, அந்தப் போராட்டம் நீதிமன்ற வழக்காக மாறியபின், நீதிமன்றத்தின் கடுமையான உத்தரவின் பேரில் 21 மாத கால நிலுவைத் தொகையை நிறுத்திக் கொண்டு ஊதியமாற்றத்தை ஏற்படுத்தியது. ஊதிய மாற்றத்தை 13.10.2017க்குள் ஏற்படுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்ற மதுரைகிளை சொன்ன அதே உத்தரவில்தான் இந்த அரசு 2017 நவம்பர் மாத இறுதிக்குள் வல்லுநர் குழுவின் அறிக்கை பெறப்பட்டு அதன்பேரில் முடிவை மேற்கொள்வதாக நீதிமன்றத்தில் உத்தரவாதமளித்தது. ஆனால் 23.10.2017ஆம் தேதி பட்டியலிடப்பட வேண்டிய ஊதிய மாற்றம் தொடர்பான வழக்கு பலமுறை முறையிட்டும் பட்டியலிடப்படாமல் உள்ளது. இதிலும் அரசின் கைங்கர்யம் உள்ளதோ என அச்சப்பட வேண்டியுள்ளது.

**வள்ளுவரும், வரலாறும்!**

எந்த நாட்டில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுக்கான உரிமைகளைப் பெற்று கௌரவமாக நடத்தப்படுகிறார்களோ அந்த நாட்டில்தான் மக்கள் நலத்திட்டங்களும் கல்வியறிவும் மேம்படும் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தினம் தினம் மக்களை விசாரித்து முறையானவற்றைச் செய்யாத அரசன் நாளடைவில் நாட்டை இழப்பான் என்று நாம் சொல்லவில்லை உலகப் பொதுமறை சொல்கிறது,

**‘‘நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாடொறும் நாடு கெடும்.’’**

அரசனும் அரசாங்கமும் எப்படி இருக்க வேண்டும் என்று வள்ளுவன் மட்டுமல்ல வரலாறும் சொல்கிறது,

மகதநாட்டு முக்கிய மந்திரி சாணக்கியர் அந்நாட்டு பேரரசன் சந்திரகுப்த மௌரியரிடம் கூறுகிறார்,

**“அரசே பாடலிபுத்திரத்தில் ஒவ்வொரு நாளும் அமைதியாகவும் நிம்மதியாகவும் விடிகிறது. இந்த அமைதிக்கும் நிம்மதிக்கும் காரணம் மகத நாட்டு எல்லையில் இரவு பகல் கண்துஞ்சாமல் விழிப்புடன் குளிரிலும் பனியிலும் மழையிலும் வருடம் முழுவதும் காவல் காத்துவரும் படைவீரர்கள்தான். பேரரசே, அவர்களுக்குச் செலுத்த வேண்டிய எல்லா நிலைகளிலும் உள்ள நிலுவைகளை அவர்கள் கேட்பதற்கு முன்னரே கொடுத்துவிடுங்கள். அவர்கள் தங்கள் ஊதிய உரிமைகளை கேட்டுப்பெறும் நிலை வந்தால் அந்த நாள் மகத நாட்டுக்கு மிகவும் துரதிருஷ்டவசமான நாளாக இருக்கும். அதன்பிறகு நீங்கள் மகதநாட்டுக்கு பேரரசனாக இருக்கும் தகுதியை நியாயப்படியும், தர்மப்படியம் இழந்து விடுவீர்கள்’’ என்று.**

**பொய்களும், புளுகுமூட்டை அமைச்சரும்!**

ஆனால் தமிழ்நாட்டு முக்கிய மந்திரி, அரசின் நலத்திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் அரசு ஊழியர்களுக்கும், மாணவர்களின் அறிவுக்கண் திறக்க பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டிய ஊதிய நிலுவைகளை 21 மாத காலம் பிடித்து வைத்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், உரிமைகள் கேட்டு போராடும் ஜாக்டோ ஜியோ அமைப்பினர் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் அரசின் மொத்த வருவாயில் 70 சதவீதத் தொகையை அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் செலவிடுவதாகவும் நலத்திட்டங்களுக்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் வெறும் 6 சதவீதம் மட்டுமே செலவிடப்படுவதாகவும் ஏற்கெனவே கொடுத்துள்ள சம்பள உயர்வையும் சலுகைகளையும் கருத்தில்கொண்டு மக்களின் நலன் கருதி நாமெல்லாம் பொறுப்போடு கடமையாற்ற வேண்டும் என்று பொய் மூட்டைகளை விளம்பரம் மூலம் அவிழ்த்து விட்டுள்ளார்.

அவர் இந்தப் புளுகு மூட்டை விளம்பரத்திற்கு ஆன செலவும் அரசு ஊழியர்களுக்காக செய்யப்படும் செலவுகளில் சேரும் என்பதை முதலில் அவர் உணர்ந்து கொள்ளட்டும். பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் கொடுத்துள்ள விளம்பரம் முழுக்க முழுக்க பொய் மூட்டைகள் என்பதையும் அவர், தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக மிகக்கடுமையாக போராடி வரும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது மக்களுக்கு கோபம் ஏற்பட வேண்டும் என்ற நயவஞ்சக எண்ணத்திலேயே உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டுள்ளார் என்பதையும் மக்களுக்கு கொண்டு சென்று அமைச்சரின் பொய்முகத்தை பொசுக்க வேண்டியது ஒவ்வொரு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியரின் கடமையாகும்.

பொதுமக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் விளம்பரம் வெளியிட்டுள்ள அமைச்சர் ஜெயக்குமார் அரசின் மொத்த வருவாயில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்டோருக்கு செலவிடப்படும் தொகை 70 சதவீதம் என தெரிவித்திருப்பது எத்தனை பெரிய புளுகுமூட்டை என்பதற்கு தமிழக அரசின் 2018-2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையே ஆதாரமாகும். அதில் நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்,

> **“2018-2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் சம்பள செலவினத்திற்கான ஒதுக்கீடு 52,171 கோடி ரூபாயாகும். ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுகால பலன்கள் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு 25,362 கோடி ரூபாயாகும். ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தியதால், 2017-2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் மற்றும் 2018-2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மற்றும் இதர ஓய்வுகால செலவினங்களுக்கான ஒதுக்கீட்டில் உயர்வு காணப்படுகிறது. இந்த நிதி ஒதுக்கீடுகள் 2018-2019 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் செலவுகளில் 40.02 சதவீதமாகும்.’’**

என்று தெரிவித்துள்ளார். ஆக, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு தமிழக அரசின் மொத்த வருவாயில் செலவிடப்படும் தொகை 40.02 சதவீதம் மட்டுமே என்பதை 70 சதவீதம் என்று தவறான தகவலை விளம்பரப்படுத்தி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் போதாது என்பார்கள் என்ற வகையில் கொச்சைபடுத்தியுள்ளார் இந்த அமைச்சர். உண்மையிலேயே இவர்கள் நடத்துவது மக்கள் நல அரசாக இருந்தால் எம்.எல்.ஏ.க்களுக்கு அவர்கள் கேட்காமலேயே 110 சதவீதம் அளவுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்காமல் இருந்திருக்க வேண்டும். அமைச்சர்கள் தங்கள் வாகனங்களுக்கு முன்னாலும் பின்னாலும் வாகனங்கள் அணிவகுத்துச் செல்வதை குறைத்து பெட்ரோல் டீசல் செலவுகளை மிச்சப்படுத்த வேண்டும். அரசு விழாக்களை ஆடம்பரமில்லாமல் சிக்கனமாக நடத்த கற்றுக் கொள்ள வேண்டும். எம்.எல்.ஏ.க்கள் வாங்கும் சம்பளம், ஓய்வூதியத் தொகை, அமைச்சர்கள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு ஆகும் பராமரிப்பு மற்றும் பெட்ரோல், டீசல் தொகை, போன்ற எல்லாவற்றையும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் சம்பளக் கணக்கில் சேர்த்தால் 70 சதவீதத் தொகை என்ன அதற்கு மேலும்தான் வரும். இதேபோல்தான், 2002-ல் அரசு ஊழியர்கள்

போராடியபோது ஜெயலலிதா, அரசு ஊழியர்களுக்கு அரசின் வருவாயில் இருந்து 94 சதவீதம் செலவு செய்வதாக பொய்யுரைத்து அதற்கான பலனை அடுத்த தேர்தலிலேயே அனுபவித்தார்.

**அரசு ஊழியர்களின் சம்பளத்தை செலவினமாக பார்ப்பது அரசின் பலவீனமே!**

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கு வழங்கப்படும் தொகையை ஒரு அரசாங்கம் செலவினமாக பார்ப்பதே அந்த அரசு பலவீனமான அரசு என்பதை பறைசாற்றும் முரசாகும். அரசாங்கத்திற்கு வருவாய் தேடித் தருவதில் அரசு ஊழியர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பதை அமைச்சர்களும் அதிகாரிகளும் மறந்துவிடக்கூடாது. அதே சமயம் அரசாங்கத்திற்கு வருவாய் தேடித்தருவது மட்டுமே அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பணியல்ல. மக்கள் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் தான் ஒரு அரசாங்கத்தின் அரசியல் ரீதியான வெற்றி அமைந்துள்ளது. அதைப்போலவே நாளைய தலைமுறைக்கான திறமையாளர்களை உருவாக்கும் பணியில் ஆசிரியர்கள் பங்களிப்பு அத்தியாவசியமானது. கூட்டல் கழித்தல் பார்க்க வேண்டிய இடம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சம்பளப்பட்டியல் அல்ல. அப்படி கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் சம்பளம் அரசாங்கத்திற்கு சுமையானதல்ல என்பதை நம்மால் பட்டியலிட முடியும்.

இந்த நாட்டில் பொய் வருவாய் காட்டாத பிரிவினர் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் என்பதை இந்த ஆட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது. அம்பானிகளைப் போல், அதானிகளைப் போல், அமைச்சர்களைப் போல், பல வியாபாரிகளைப் போல் பொய் வருமானக் கணக்கு காட்டி வருமான வரி ஏய்ப்பும், விற்பனைகளை குறைத்துக் காட்டி விற்பனை வரி ஏய்ப்பும் செய்பவர்கள் அல்ல அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும். அதே போல் இந்த நாட்டில் ஒழுங்காக வருமான வரி செலுத்துவதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களைப் போல் எல்லோரையும் பட்டியலிட முடியாது. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு செலவிடப்படும் 40.02 சதவீதத் தொகையில் வருமான வரி மூலம் ஒரு கணிசமான சதவீதம் அரசாங்கத்திற்கே திரும்பிச்செல்கிறது. இது தவிர கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள மொத்த பணியிடங்களுக்கும் (சுமார் 14 லட்சம் பணியிடங்கள்) அரசு சம்பளத்தை கணக்கிட்டு 40.02 சதவீதம் என்று சொல்லியுள்ளது. இந்த 14 லட்சம் பணியிடங்களில் சுமார் மூன்றரை லட்சம் பணியிடங்கள் தொடர்ந்து சில வருடங்களாக காலியாக விடப்பட்டுள்ளன. அரசு கணக்கிட்டுள்ள மொத்த சம்பளத்தில் இந்த மூன்றரை லட்சம் பணியிடங்களுக்கான சம்பளத்தை குறைத்துக் காட்ட வேண்டும். அப்படி காட்டினால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு செலவிடப்படும் தொகை அரசின் வருவாயில் 25 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்குள்தான் வரும். மேற்சொன்ன மூன்றரை லட்சம் காலி பணியிடங்களுக்கான வேலைகளையும் தற்போது பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள்தான் பார்த்து வருகிறார்கள். அதற்காக அவர்கள் தாங்கள் கூடுதலாக வேலை பார்க்கும் காலியிட பணிகளுக்கான சம்பளத்தை கேட்டுப்பெற உரிமையுடையவர்கள். ஆனாலும் எந்த ஒரு அரசு ஊழியரோ, ஊழியர் சங்கமோ அதற்காக போராடவில்லை என்பதையும் அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

**ஐமுக்காளமும், ஜெயக்குமாரும்!**

ஆனால் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் பொய்யான புள்ளிவிவரங்களை அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை கொச்சைப்படுத்தும் விதமாக விளம்பரமாக வெளியிட்டு மக்கள் மனதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பற்றி தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்த முயற்சித்திருப்பது கண்டனத்திற்குரியதாகும். நம்முடைய கோட்டை முற்றுகைப் போராட்டத்திற்கு முன் அவர் வெளியிட்டுள்ள விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள உயர்வு வித்தியாசம் ஐமுக்காளத்தில் வடிகட்டிய பொய் என்பதை அனைத்து அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அறிவர். பத்து வருட இடைவெளிக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்டுள்ள ஊதியமாற்றத்தின் காரணமாக ஒரு அலுவலக உதவியாளர் 1.1.2016 அன்று கூடுதலாக பெறும் அடிப்படை சம்பள உயர்வு என்பது வெறும் ரூ.1,975/- ஆக இருக்க அமைச்சரோ ரூ.6,099/- எனக் கூறியிருப்பதும், கண்காணிப்பாளர், உதவி பிரிவு அலுவலர், பட்டதாரி ஆசிரியர், முதுநிலை ஆசிரியர், ஆகியோருக்கு சம்பள உயர்வு என்பது ரூ.5,125/- ஆக இருக்க விளம்பரப்பட்டியலில் அதை ரூ.19,222/- என மிகைப்படுத்தி காட்டியிருப்பதும், பிரிவு அலுவலர், மேல்நிலை தலைமையாசிரியர் போன்றோருக்கு அடிப்படை சம்பளத்தில் ஊதிய மாற்ற உயர்வு என்பது ரூ.8,980/- என்றிருக்க அமைச்சரோ அவர்கள் தங்கள் அடிப்படைச் சம்பளத்தில் ரூ.22,272/- உயர்வு பெற்றுள்ளதாக காட்டியுள்ளதும், இவைமட்டுமின்றி பட்டியலில் கண்டுள்ள அனைத்து

ஊதியங்களும் மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளதும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை கோபப்படுத்தியுள்ளது.

**குப்பைத்தொட்டி விமர்சகரும், குருட்டாம்போக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரியும்!**

நாம் ஏதோ தேவையற்ற போராட்டங்களை நடத்தி வருவதாக ஒரு நாடோடி விமர்சகரும், வாக்குவங்கி அரசியலுக்காக போராட்டம் நடத்துவதாக முருகன் என்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியும் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுகிறார்கள். நாடோடி விமர்சகருக்கு வயலில் இருக்கும் பச்சிலை தெரியாது, குப்பைத் தொட்டியில் இருக்கும் எச்சிலைதான் தெரியும் என்பதால் அவரின் விமர்சனத்தை விட்டுவிடலாம். ஆனால் ஒரு ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி பொறுப்புடன் கட்டுரை எழுத வேண்டும் என்பதை மறந்து, யாரையோ திருப்தி படுத்துவதற்காக அமைச்சரின் விளம்பர அறிக்கையை நகலெடுத்து தவறான தகவல்களை கட்டுரையாக்கியிருக்கிறார். குருட்டாம் போக்கில் கட்டுரை எழுதுகிற ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தன் கட்டுரையில் அரசு ஊழியர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் தேர்தல் நேரத்தில் வாக்குச்சாவடிகளில் அந்த கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டு அவர்களை வெற்றி பெற வைப்பதால் அந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தால் சலுகைகள் கிடைப்பதாகவும் அடித்து விட்டிருக்கிறார். வாக்குச்சாவடியில் அரசு ஊழியர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக செயல்படுவார்கள் என்றால் மற்ற எந்த கட்சியும் ஆட்சிக்கு வந்திருக்க முடியாதே. தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் ஒரே கட்சிதானே ஜெயித்திருக்க வேண்டும். படித்த ஐஏஎஸ் அதிகாரி மத்திய அரசு ஊழியர்களின் ஊதியவிகிதம் படிநிலைகள்அதேபோல் மற்ற மாநில அரசு ஊழியர்களின் ஊதியம் போன்றவற்றை ஒப்புமைப்படுத்தி கட்டுரை எழுதி நம்மை பலவீனப்படுத்த முடியாது என்பதால் பணத்துக்காக யாரோ வீசிய எலும்புத்துண்டை கவ்விக்கொண்டு நடுநிலை தவறி எழுதியிருப்பது அவர் வகித்த பதவிக்கும் படித்த படிப்பிற்கும் சிறுமை சேர்க்கும் செயலாகும்.

**இறுக்கப்படும் உரிமைகளின் குரல்வளைகள்!**

ஊதிய முரண்பாடுகளைக் களைய நாம் பத்தாண்டுகளுக்கு மேலாக போராடுகிறோம் வஞ்சிக்கப்படுகிறோம். பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுக்கிறோம் போராடுகிறோம். ஆனால் வல்லுநர் குழு என்ற கானல் குழுவின் பெயரால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். 21 மாத ஊதிய நிலுவை கேட்டு போராடுகிறோம். முள்வேலி தடுப்புகளால் முடக்கப்படுகிறோம். சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்க வேண்டி போராடுகிறோம், அவை வெறும் பரிசீலனையில் உள்ள அறிவிப்புகளாகவே உள்ளன. தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று குரல் கொடுத்தால், ''பணியாளர்கள் பகுப்பாய்வுக் குழு'' என்ற ஒரு குழு அமைக்கப்பட்டு நிரந்தரப் பணியிடங்களை ஒப்பந்தப் பணியிடங்களாகவோ அல்லது தற்காலிகப் பணியிடங்களாகவோ மாற்றுவதற்கான நடவடிக்கைகள் அரசாணை எண்.56 மூலம் முடுக்கிவிடப்படுகிறது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள், காலிப் பணியிடங்களை நிரப்புங்கள் என்று சங்கெடுத்து ஊதுகிறோம் அரசாணைகள் போடப்பட்டு ஆசிரியர் பணியிடங்கள் ஒழிக்கப்படுகின்றன.

**அரசாங்கம் ஒரு முன்மாதிரி முதலாளி!**

ஒரு நல்லாட்சி அரசாங்கம் அதன் ஊழியர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதை பூபேந்திரநாத் ஹசாரிகா மற்றும் ஒருவர் -எதிர்- அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் பலர் [2013(2) SCC 516 Para 53] என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளதை அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் எதிரிகள் போல் பாவித்து விளம்பர அறிக்கைகள் வெளியிடும் அமைச்சரும் ஆட்சியாளர்களும் கவனத்தில் கொள்வது நல்லது.

**''மாநில அரசின் பங்கு என்பது ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஒரு முன்மாதிரி முதலாளியாக இருக்க வேண்டும், எதிர்காலத்தில் ஊழியர்களின் உரிமைகோரிக்கைகளின் பேரில் சினம் கொள்ளாமல் அது இருக்கும் என்ற**

**எதிர்பார்ப்பையும், பொறுப்பில்லாத அலட்சியப் போக்குடன் பெரிய அளவில் விலகி நின்று வேடிக்கை பார்க்காது என்ற நம்பிக்கையையும், ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அது எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் நம்பிக்கை நீர்த்துப்போகும் சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. ஒவ்வொரு ஊழியரின் நம்பிக்கையும், மதிப்பும் மகிமையும் வாய்ந்தது. அதை முன்மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு ஏமாற்றமாகவோ, துரோகமாகவோ மாற்றி அவர்கள் பணியேற்றத்தில் சதுரங்க விளையாட்டு ஆடக்கூடாது. அமைதி உணர்வும், சிரத்தையான நேர்மையும் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்க வேண்டும். நம்பகமான சூழல் நிலவவேண்டும். ஊழியர்கள் அனைவரும் தாங்கள் கண்ணியத்துடனும் நேர்மையாகவும் நடத்தப்படுகிறோம் என்றும் தங்கள் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாது என்றும் நிச்சயமாக நம்ப வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்ற கருத்துப்படிமம் உறுதிப்படும்.’’**

## காலவரையற்ற உண்ணாநிலை அறப்போராட்டம் தான் ஒரே வழி!

மேற்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பார்த்தால் இங்கே நடப்பது நல்லாட்சியா மக்கள் நல அரசா என்ற சந்தேகம்தான் எல்லோருக்கும் எழும். அரசு தன் ஊழியர் விரோதப் போக்கை கைவிட்டு அரசும் ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் பரிசீலித்து நிறைவேற்ற முன் வரவேண்டும் என்றுதான் இவ்வளவு காலமும் போராடுகிறோம். இத்தனை போராட்டங்கள் நடத்தியும் அரசு தாய் மனதோடு தன் ஊழியர்களை காக்கத் தவறிவிட்ட நிலையில் இருக்கின்ற நம்பிக்கைகள் எல்லாம் பொய்த்துப்போன நிலையில் காலவரையற்ற உண்ணா நிலை என்ற இறுதிகட்ட அறவழிப் போராட்டத்தை முன்னெடுப்பது என்று முடிவு

**ஜாக்டோ-ஜியோ (JACTTO-GEO)**

**(Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisations)**

**அரசின் அலட்சிப் போக்கிற்கு ஒரே பதிலடி**
**காலவரையற்ற உண்ணாவிரத அறப்போராட்டமே!**

போர்க்களம் பல கண்டு வெற்றி வாகை சூடிய ஆசிரியர் பேரினமே! அரசு ஊழியர் பேரினமே!

- CPS திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை அமுல்படுத்திட வேண்டும்!
- இடைநிலை மற்றும் முதுநிலை ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி! ஆசிரியர்கள், அமைச்சுப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளிலுள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்களுக்கு ஊதிய முரண்பாடுகளை களைய வேண்டும். கல்லூரி மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு 7வது ஊதியக்குழு பரிந்துரையை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.
- சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் பகுதி நேர சிறப்பு ஆசிரியர்கள், தொகுப்பூதியம், கணினி ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும்
- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடன் வழங்கிட வேண்டும்!
- அரசாணை எண்.56ல் இளைஞர்களின் வேலை வாய்ப்பினை பறிக்கக்கூடிய வகையில் வெளியிட்ட பணியாளர்கள் பகுப்பாய்வு குழுவினை ரத்து செய்யப்பட வேண்டும். பள்ளிக் கல்வித் துறை மூலமாக வெளியிட்டுள்ள அரசாணை எண்கள் 100 (ம) 101 மூலமாக ஒழிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களை காத்திடவும், அரசுப் பள்ளிகளை மூடுவதைத் தடுத்திடவும் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும்

என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி.

**11.06.2018 முதல் சென்னையில் ஒருங்கிணைப்பாளர்களும், உயர்மட்டக் குழு நிர்வாகிகளும் காலவரையற்ற உண்ணாவிரதம்**

**11.06.2018 முதல் அனைத்து மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் மாலை நேர ஆர்ப்பாட்டம்**

**ஒன்றுபடுவோம் - வென்று முடிப்போம்!**
**உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப் போரில்**
**உறுதியுடன் நின்று வெற்றியை நமதாக்குவோம்!**

- ஜாக்டோ-ஜியோ

செய்துள்ளோம். ஜாக்டோ-ஜியோவின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உயர்மட்டக் குழு உறுப்பினர்கள் 11.06.2018 முதல் சென்னையில் காலவரையற்ற உண்ணாநிலை மேறகொள்வது எனவும், அன்று முதல் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தினந்தோறும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே தோழர்களே அணி திரளுங்கள். இது இன்னொரு ஜல்லிக்கட்டு போராட்டம் போல, இன்னொரு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் பேராட்டம் போல, இன்னொரு ஸ்டெர்லைட் ஆலையை மூட நடந்த மக்கள் போராட்டம் போல நம் அனைவரின் ஒற்றுமையையும் உறுதியையும் உணர்த்தும் உரிமைப்போராட்டமாக மாற்றிக் காட்டுவோம்.

**முன்னோடிகளுக்கு நன்றிக்கடனாக. சந்ததிகளுக்கு வழிகாட்டியாக!**

தோழர்களே! இந்தப் போராட்டம் நம் ஒவ்வொருவருக்கும் வைக்கப்பட்டுள்ள சவாலாகும், நாம் இதுவரை அனுபவித்த உரிமைகள் நம்முடைய முன்னோடித் தோழர்களால் பெற்றுத்தரப்பட்ட உரிமைகளாகும். எந்த உரிமையும் போராடாமல் கிடைத்ததல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்முடைய மாபெரும் பொறுப்பே எதிர்காலத் தலைமுறையினர் பெருமையோடு சொல்லிக்கொள்கிற அடிச்சுவடு ஒன்றை விட்டுச் செல்வதே ஆகும். அந்த உரிமை பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்ததாகவோ, தொகுப்பூதியம், மதிப்பூதியத்தில் பணிபுரியும் ஊழியர்களை காலவரை ஊதியத்தில் கொண்டு வந்தததாகவோ, ஊதிய முரண்பாடுகளை களைந்ததாகவோ, 21 மாத கால ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை பெற்றுத் தந்ததாகவோ அல்லது இவை அனைத்தையும் மீட்டெடுத்ததாகவோ இருக்க வேண்டும்.

சாக்ரடீஸ், ப்ளேட்டோவிற்குக் கற்றுத் தந்தார், ப்ளேட்டோ அரிஸ்டாட்டிலுக்கு கற்றுத் தந்தார், அரிஸ்டாட்டில் மாவீரன் அலெக்ஸாண்டருக்குக் கற்றுத் தந்தார். நாம் நம் சந்ததியினருக்கு உரிமைகளை போராடிப் பெற கற்றுத் தருவோம். அதற்கு நாம் அனைவரும் முன் நிற்போம்.

---

தலைசிறந்த மக்கள் தங்களுக்குப் பிறகு எதையாவது விட்டுச் செல்கின்றனர். வெற்றியாளர்கள் எதையுமே தனியாக சாதிக்க முடியாது என்பதை கண்டுகொள்கிறார்கள். சாம்பியன்கள் பதக்கங்களை வென்றாலும்கூட அவர்களது வெற்றிக்குப் பின்னால் பலர் இருப்பதையும், அவர்கள் இல்லாமல் அது சாத்தியமாகி இருக்காது என்பதையும் உணர்கிறார்கள். அவர்களது ஆசிரியர்கள், பெற்றோர்கள், பயிற்சியாளர்கள், விசிறிகள், வழிகாட்டும் அறிவுரையாளர்கள் என்று வெற்றியாளருக்கு உதவியவர்கள் யாருக்குமே அந்தக் கடனை முழுமையாகத் திருப்பித் தர முடியாது. அவர்கள் தங்கள் நன்றியைக் காட்டும் ஒரே வழி தங்களுக்குப் பின் வருபவர்களுக்கு உதவுவதுதான். இந்த காலவரையற்ற உண்ணாநிலை அறப்போராட்டத்தில் உண்ணாநிலை இருக்கும் தலைவர்களுக்கு நாம் ஒவ்வொருவரும் உறுதுணையாக இறுதி வரை நிற்க வேண்டும். நம்முடைய உறுதியான களப் போராட்டம் மட்டுமே நம்முடைய உரிமைகளை மீட்டெடுக்கும். இது இறந்தகால முன்னோடிகளுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக மட்டுமல்ல, வருங்கால சந்ததியருக்கு நாம் விட்டுச் செல்லும் அடிச்சுவடாக வழிகாட்டுதலாக இருக்க வேண்டும். எனவே, இந்த உணர்வுபூர்வமான உரிமைப் போராட்டத்தில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் அனைவரும் பங்கேற்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உறுதி செய்ய வேண்டும் என்று ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்புக் குழு கேட்டுக் கொள்கிறது.

முதலமைச்சர் நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி கூறியுள்ளார் அதனால் போராட்டம் வேண்டாம் என்று பிரிந்துபோன சங்கத் தலைவர்களை, அமைப்புகளை, ஊழியர்களை மீண்டும் நேசக்கரம் நீட்டி பாசத்துடன் அழைக்கிறோம் வாருங்கள். ஆட்சியாளர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிகளை நயவஞ்சக நடவடிக்கைகளை இப்போதாவது உணர்ந்துகொண்டு எல்லோரும் சேர்ந்து போராட வாருங்கள். போராடாமல் எதுவும் கிடைத்ததாக சரித்திரம் இல்லை. இந்த காலவரையற்ற உண்ணாநிலை இன்னொரு சரித்திரம் படைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**ஒன்றுபடுவோம் வென்று முடிப்போம்**

**உரிமைகளை வென்றெடுப்பதற்கான இறுதிப்போரில்**

**உறுதியுடன் நின்று வெற்றியை நமதாக்குவோம்!**

❖